GWOP No. 391/2021

**12.09.2025**

**ம.த.சா. 1 – திரு. மோகன்பாபு, த/பெ. துரைபாபு**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

என் மகனை என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் மகனின் பெயர் என்ன கீதாஅக் ஷர். அவருக்கு என்ன வயதாகிறது என்ன படிக்கிறார் என்றால் 13 வயதாகிறது. 8ஆம் வகுப்பு படிக்கிறார். என்னுடைய திருமணம் பெரியவர்கள் பார்த்து செய்து வைத்த திருமணம் என்றால் சரிதான். திருமணத்தின் போது எதிர்மனுதாரர் வீட்டாரிடம் என் வயது என்ன என்று கூறினேன் என்றால் 31 என்று என கூறியிருந்தேன். என்னுடைய ஜாதகம் கொடுத்திருந்தேனா என்றால் ஜாதகம் கொடுக்கவில்லை. குறிப்பு கொடுத்திருந்தேன். எனக்கு ஜாதகம் ஜோசியம் நம்பிக்கை உண்டா என்றால் அடிக்கடி பார்ப்பேன். எனக்கு ஜாதகம் எழுதவில்லையா என்றால் பெரியவர்கள் எனக்கு எழுதி வைக்கவில்லை. நான் என்னுடைய வயதை தவறாக குறிப்பிட்டு ஜாதகத்தையும் தவறாக கொடுத்தேன் என்றால் இல்லை. நான் திருமணத்தின் போது என்ன வேலை செய்து கொண்டிருந்தேன் என்றால் தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வந்தேன். என்னுடைய கல்வி தகுதி M.A., B.Ed., ஆகும். தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன் என்று சொல்லி தான் திருமணம் செய்தேன் என்றால் அவ்வாறு தான் கூறினேன். பேராசிரியராக பணிபுரிவதாக சொல்லி தான் திருமணம் செய்தேன் என்றால் சரியல்ல. திருமணத்தின்போது பிறந்த தேதி, ஜாதகம், கல்வித் தகுதி ஆகிய அனைத்தையும் தவறாக கொடுத்து திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. 30/01/2012 அன்று எனக்கு திருமணம் நடைபெற்றது. திருமணமாகி எத்தனை மாதம் கழித்து எதிர்மனுதாரர் கருவுற்றார் என்றால் 3 மாதங்களில் கருவுற்றார். 14/01/2013 அன்று எனக்கு ஒரு குழந்தை பிறந்தது. மேற்படி குழந்தைக்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

எதிர்மனுதாரர் கருவுற்றிருந்தபோது மாதா மாதம் எந்த மருத்துவமனைக்கு செக்கப்க்காக சென்றார் என்றால் செங்குன்றத்தில் இருந்த அப்பல்லோ ஸ்கேன் சென்டருக்கு சென்றார். எதிர்மனுதாரருக்கு எங்கு பிரசவம் ஆனது என்றால் பாடியநல்லூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரசவமானது. நான் பொருளாதார ரீதியாக நல்ல நிலைமையில் இருக்கும் போது ஏன் ஆரம்ப சுகாதார நிலையத்தில் எதிர்மனுதாரர் பிரசவத்திற்காக சேர்த்தோம் என்றால் எதிர்மனுதாரர் கருவுற்று 3ஆவது மாதம் முதல் அவரது பெற்றோர் வீட்டில் இருந்தார். அவர்கள் எதிர்மனுதாரரை பிரசவத்திற்காக ஆரம்ப சுகாதார நிலையத்தில் சேர்த்தார்கள். நான் ஒரு முறை கூட எதிர்மனுதாரருடன் மருத்துவமனைக்கு சென்றதில்லை என்றாலும் அவருடைய தாயார் தான் மருத்துவமனைக்கு உடன் சென்றார் என்றால் சரியல்ல. நான் சென்றிருக்கிறனே். நான் அவ்வாறு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதற்கான ரசீது என்னிடம் உள்ளதா என்றால் வீட்டில் தேடிப்பார்த்தால் கிடைக்கும். குழந்தை பிறக்கும் போது நான் எதிர்மனுதாரருடன் மருத்துவமனையில் தான் இருந்தேன். நான் எத்தனை நாட்கள் எதிர்மனுதாரருடன் மருத்துவமனையில் இருந்தேன் என்றால் குழந்தை பிறந்த அன்று மட்டும் எதிர்மனுதாரருடன் இருந்தேன். அன்றைய தினம் ஒரு இறப்பிற்கு சென்றுவிட்டு திரும்பவந்து எதிர்மனுதாரருடன் மருத்துவமனையில் இருந்தேன். குழந்தை பிறந்தபிறகு என்னிடம் குழந்தையை காட்டிய பிறகு குழந்தை என் சாயலில் இல்லை என்று கூறிவிட்டு நான் சென்றுவிட்டேன் என்றால் அது தவறு. தற்போது நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால் RMK Residential School, Staff Quarterல் தங்கி வருகிறேன். என்னுடன் தற்போது யார் வசித்து வருகிறார்கள் என்றால் என் அக்கா வசித்து வருகிறார். நானும் எதிர்மனுதாரரும் எவ்வளவு நாளாக தனியாக வசித்து வருகிறோம் என்றால் 2017ஆம் வருடம் முதல் தனியாக வசித்து வருகிறோம். திருவள்ளூர், சார்பு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் விவாகரத்து வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த மனுவில் நான் ஆஜராகி என்னுடைய ஆட்சேபனையை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் ஆஜராகி ஆட்சேபனை தெரிவித்தேன். அந்த மனு

என்ன ஆனது என்று எனக்கு தெரியுமா என்றால் அது ஒருதலைபட்சமாக தீர்ப்பானது. எதிர்மனுதாரர் வேறு திருமணம் செய்து கொண்டார். ஒருதலைபட்சமாக தீர்ப்பானதற்கு பிறகு நான் மேல் முறையீடு செய்தேனா என்றால் எதிர்மனுதாரருக்கு வேறு திருமணம் ஆனதால் நான் மேல்முறையீடு செய்யவில்லை. நான் மறுமணம் செய்து கொண்டேனா என்றால் இல்லை. குழந்தையை எவ்வாறு என்னால் பராமரிக்கமுடியும் என்றால் நான் பள்ளியில் ஆசிரியராக இருப்பதால் குழந்தையை பள்ளிக்கு நானே அழைத்து சென்று நானே மறுபடியும் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வருவேன். வாரநாட்களில் என்னிடம் குழந்தை இருந்தாலும் சரி, வார இறுதிநாட்களில் குழந்தை எதிர்மனுதாரரிடம் இருந்தாலும் சரி. வாரநாட்களில் எதிர்மனுதாரரிடம் குழந்தை இருந்தாலும் சரி, வார இறுதிநாட்களில் குழந்தை என்னிடம் இருந்தாலும் சரி. என்னுடைய பள்ளியில் நான் ஆசிரியராக இருப்பதால் என் குழந்தைக்கு இலவச கல்வி அளிப்பார்கள். குழந்தைக்கு உணவு Hostel ல் தான் கொடுக்க முடியும் என்றால் எனக்கு சமைக்க தெரியும்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.